RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1866

# தூர்வை புதினத்தில் வேளாண்மையும் தொழில்மயமாதல் கோட்பாடும்

க. மாரியம்மாள் [அ, *], கோ. சந்தனமாரியம்மாள் [அ]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி-628503, தமிழ்நாடு, இந்தியா.

# Agriculture and the theory of industrialization in the Thoorvai novel

K. Mariammal [a, *], G. Santhanamariammal [a]

[a] Department of Tamil, Government Arts and Science college, Kovilpatti-628503, Tamil Nadu, India

* Corresponding Author: tamildeptkvp@gmail.com

Received: 23-07-2022
Revised: 28-10-2022
Accepted: 11-11-2022
Published: 08-12-2022

**ABSTRACT**

Advancement of agriculture with reference to the novel "Thoorvai" Indian economy mostly dependent on Agriculture. She slighted charge is the agriculture will affect other sectors dramatically. India is the second most populous nation, First in millet production, second in wheat and paddy production and comes third in coconut production. For highly populated nations like India, a focus an agriculture is necessary to maintain food safety. Without receiving enough compensation, farmers from earlier generations are less likely to allow their forebears to participate in agriculturem, which results in a decline in agricultural activity this research.

**Keywords:** Thoorvai, Agriculture, Food, Production

## முன்னுரை

வேளாண்மையே வாழ்வாதாரமாக கொண்டு இயங்கும் கிராமங்களில் உருளைகுடி என்னும் கிராமமும் ஒன்று. இக்கிராமத்தை மையமாகக் கொண்டு எழுதப் பெற்ற 'தூர்வை' என்னும் நாவல் அவ்வூர் மக்களின் வாழ்வியலைச் சித்தரிப்பதாக அமைகின்றது. ஐரோப்பியர் கால வருகையால் இந்தியாவில் நிகழ்ந்த மாற்றம் குறிப்பிடத்தக்கது. 1950களில் நிகழ்ந்த மாற்றமானது தமிழக கிராமப்புறங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 1950க்குப்பின் கிராமப்புறங்களையும் தாக்கிய நிலையை 'தூர்வை' என்னும் நாவல் சித்தரிக்கின்றது. இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில் மயமாதல், நகர்மயமாதல் போன்றவற்றினால் கிராமங்களில் ஏற்பட்ட பல்வேறு வகையான மாறுதல்களை இந்நாவல் சித்தரிக்கிறது.

## வேளாண்மையை நிர்ணயிக்கும் காரணிகள்

உருளைகுடி என்னும் ஊரில் விவசாயம் வளர்ந்தோங்கியிருந்த நிலையை இந்நாவல் வெளிக்காட்டுகின்றது. இக்கிராமத்தில் விவசாயம் செழித்து வளர்ந்து வந்ததற்கான அடிப்படைக் காரணம் அவ்வூரில் மண்வளம், நீர்நிலைகள், காலநிலை போன்றவைகளின் அடிப்படையில் விவசாயம் சிறந்து விளங்கியுள்ளது. இந்த மூன்று காரணிகளில் ஒரு காரணி மாற்றம் அடைந்தாலும் அவை வேளாண்மையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். மண், நீர், காலம் முறையாக அமைந்தால் மட்டுமே வேளாண்மை சிறப்புப் பெறும். ஏதேனும் ஒன்று மாற்றம் அடைந்தாலும் விவசாயம் நலிவடைகின்றது. மேற்கண்ட மூன்று காரணிகளும் சீராக அமைந்து இருந்த காலங்களில் உருளைக்குடி கிராமத்தில் வேளாண்மை சிறப்புப் பெற்று இருந்தது.

## விவசாயம் நலிவடைதல்

உருளைக்குடி என்னும் கிராமத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் விவசாயத்தை முதன்மையான தொழிலாக கொண்டிருந்தனர் என்பதை இந்நாவலின் வழிநின்று அறியமுடிகிறது. வேளாண்மையில் சிறந்து விளங்கிய இக்கிராம மக்கள் அனைவரும் மழையினால் பெருகும் கண்மாய் தண்ணீராலும் கண்மாய் நிறைவதால் கிணற்றில் ஊறும் கிணற்றுத் தண்ணீராலும் விவசாயம் செய்தனர் என்ற கருத்து இந்நாவலின் மூலம் அறியமுடிகின்றது.

"சரியான படத்துல வெதப்பு விழுந்து மழயும் ஏறிமாறிப் பேஞ்சுட்டா கரிசக் காட்டப் பீட்டுப் பண்ண எதாலயும் முடியுமா? அப்படியே உப்பா குமிஞ்சிராது குமிஞ்சி" என சம்சாரிகளின் உரையாடலின் மூலம் இக்கிராமத்தில் விளைச்சல் எவ்விதம் இருந்திருக்க கூடும் என்பதை நம்மால்அறியமுடிகின்றது. நல்ல மழைபெய்து மகசூல் அதிகம் பெற்று மக்கள் ஆனந்தமாய் வாழ்ந்துள்ளனர். துவரைச் செடியானது ஆள் உள்ளே போனால் தெரியாத அளவிற்கு வளர்த்தி அடர்த்தியாக வளர்ந்து நின்றது. கிராமத்தில் செல்வம் பொழிந்தது. சம்சரிகளுக்கு சந்தோமும் தாங்க முடியவில்லை. நிலத்தில் வேலை பார்க்கும் கூலிக்காரர்கள் தின்று செழித்தார்கள். களத்தில் இடமில்லாமல் படப்புகளாகவே வைத்திருந்து பொலியாக்கினார்கள். குலுக்கைகள், நிறைந்து நிறைமாத கர்ப்பிணியாய் நிற்கின்றன. இதனால் இக்கிராமத்தில் விளைச்சல் எவ்விதம் விளைந்துள்ளது. அதனால் மக்கள் எவ்வளவு மகசூல் பெற்று வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகின்றது.

பருவமழைக் காலங்களில் மழை சீராக பெய்து மழைநீர் கண்மாயில் பெருகி அதன்மூலமாக விவசாயம் செழித்து நடைபெற்ற இக்கிராமத்தில் மழைபொழிவின் சீரற்ற தன்மையால் நீர்நிலைகளில் நீர் வரத்து இல்லாமல் போனது. ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் மழைப்பொழிவை பொதுவான ஒரு கருத்தாக விவரித்து கூறுவது கடினம். ஏனெனில் ஒரு பருவ காலத்தில் அதிக மழைபெறும் அதே பகுதி அடுத்த பருவகாலத்தில் பருவமழை இல்லாமல் வறட்சியை அனுபவிக்கலாம். ஒரு நாட்டின் வளமே பருவமழை பெய்வதையோ அல்லது பொய்ப்பதையோ பொறுத்து அமைகிறது. மழையைத் தாங்கி வரும் காற்றின் திசையில் சிறிதளவே மாறுபாடு ஏற்பட்டாலும். இயல்பாக நல்ல மழைநீரைப் பெறும் பகுதிகள்கூட பாலை வனங்களாக மாறக்கூடும்.

உருளைக்குடியில் அந்த வருடம் மழை பொய்த்துப் போனது. சம்சாரிகள் வீட்டில் சேர்த்து வைத்து இருந்த விதை வித்துக்கள் எல்லாவற்றையும் காட்டில் கொண்டு போய்ப் போட்டுவிட்டு மழைக்காகக் கடவுளைக் கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள். மேகம் தினம் விளையாட்டைக் காட்டியது. கரிசல் காய்ந்து பொசுங்கியது. இன்னைக்குப் பெய்ந்து விடும். நாளைக்கு பேய்ந்து விடும் என்ற நப்பாசையில் இருந்த சம்சாரிகளின் நம்பிக்கை குறைந்து கொண்டே வந்தது.

எப்படியும் மழை பெய்யும் ஆடெல்லாம் கூடி கூடி வட்டஞ்சுத்துது மழக்கோப்பு கண்டிசனா இருக்கு நாலு நாளா தைலான் வேற தரையைத் தொட்டுப் பிறக்குது என்று ஆடு மேய்க்கும் பெரியவர் கூறினார். "என்ன பறந்து என்ன செய்ய மழை பேஞ்சா இப்ப பெய்யனும் இனி பத்து நாள் பிந்துனாலும் போச்சு மொளச்சது பூராவும் கருகிப்போகும்" என்று சம்சாரிகள் புலம்பினர். மழை சரியாக பெய்யாவிட்டாலும் காலம் மாறி பெய்தாலும் விவசாயம் செய்ய முடியாது என்ற நிலையை சம்சாரிகள் உரையாடலின் மூலம் புலனாகிறது. இதனை "பருவத்தில் மழை பொய்த்துவிட்டால் விவசாயி படும் துயரம் அளவிடற்கரியது" என்று நாராயணன் கூறுகின்றார் (Narayanan, 2014).

மழை பெறுவதற்காக "மழக்கஞ்சி" எடுத்தல் என்னும் ஒரு நிகழ்வு நடைபெறுகிறது. சிறுசுகள், பெருசுகள், இளவட்டங்கள், கொமருகள் அனைவரும் சேர்ந்து வீடுவீடாக சென்று அவர்கள் தரும் உணவை பெற்று அதனை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து அதனை குடிப்பார்கள். அந்த கஞ்சியை குடித்தவர்களை கல்லாலும், செருப்பாலும் அடித்து விரட்டுவர். அவர் கண்ணீர்விட்டு அழுதுவிட்டால் மழை பெய்யும் என்று நம்பினர். ஆனால் மழைக்கஞ்சி எடுத்தும் மழை பெய்யவில்லை.

ஊர் மக்கள் அனைவரும் வரிகொடுத்து "மழப்பேச்சியம்மன்" சாமியை கும்பிட்டார்கள். கும்பிட்டால் மழைபெய்யும் என்று நினைத்தனர் (Dharman, 2017). ஆனால் மழை பெய்யவே இல்லை. ஊரில் ஏதோ ஒரு கொடும்பாவி இருக்கின்றான் என்று கூறி ஒரு மனிதனைப் போன்று ஒரு பொம்மை

(கொடும்பாவி) செய்து அதனை எறித்தால் மமைவரும் என்று நினைத்து செய்தனர். ஆனால் அந்த முயற்சியும் ஏமாற்றத்தில் முடிந்தது.

## சம்சாரிகளின் அவலநிலை

முளைத்த விதைகள் நுனி சுருங்கி காய்ந்தன. கோரையும், பொடுதலையும் கூட காணவில்லை. கிணறுகளில் இருந்த தண்ணீர் மழை இல்லாததால் குறைந்து கொண்டே வந்தது. எல்லா சம்சாரிகளுக்கும் கண்ணக்கட்டி காட்டில் விட்டது போல இருந்தது. அந்த வருடம் கொஞ்சம் கூட வெள்ளாமை இல்லாமல் போனது. எப்போதும் வீட்டை அடைத்துக்கொண்டு ஆடையும் கோடையும் நிறைமாத கர்ப்பிணியாய் நின்ற குலுக்கைகளை வீட்டுக்கு இடைஞ்சலாக இருக்கிறது என்று உடைத்து வெளியில் எடுத்து போட்டுவிட்டனர் (Dharman, 2017).

"தலமொற தலமொறயா இருந்த சீதேவியை ஒடச்சு கடவுள் குப்பையில கொண்டு போயி போட வச்சிட்டான" என்று சம்சாரிகள் அனைவரும் புலம்பி வருந்தினர். கண்மாய் பெருகாததால் நெல்நாற்றுக்கூட பாவவில்லை. கிணறுகளில் தண்ணீர் இல்லாதபடியால் துட்டு வெள்ளாமை கிடையாது. மிளகாய் வற்றலும், ஆமணக்கும், சீனிக்கிழங்கும், நிலக்கடலையும் கண்ணில் படவில்லை.

"வேளாண் மாந்தர்க்கு உழுதாண் அல்லது இல்லென மொழி" (Madhaiyan, 2010). என்ற பெ.மாதையன் என்பவரின் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது. வேளாண்மை தொழிலை உடையவர்களுக்கு உழுதுபயிர் செய்து வாழ்தல் இன்றி வேறில்லை என்பதே இதன் பொருளாகும். இவ்வூர் மக்கள் மகளிகை சாமான்கள் வாங்குவதற்கே திண்டாடினார்கள். மிச்ச சொச்சம் இருந்த தானியங்களையும் கடையில் விற்றார்கள். விவசாயம் இல்லாததால் இத்தகைய ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டனர் அந்த ஊர் மக்கள்.

மாடுகளுக்கு கூளம் இல்லாமல் பனை ஓலைகளை வெட்டி வந்து தீவனமாகப் போட்டார்கள். அவைகள் பனை ஓலைகளை மென்று அதன் துவர்ப்பின் காரணமாக முகஞ்சுளித்த மாடுகளை பார்த்து கண்ணீர் விட்டார்கள். ஒரு சிலர் ஆடுமாடுகளை விற்றுக் குறைத்துக் கொண்டார்கள். சம்சாரிகள் அனைவரும் ஒன்றும் செய்யத் தெரியாதவர்களாய் தவித்தனர்.

ஊரில் அநேகம் பேர் இளவட்டங்களும் சம்சாரிகளும் கூட ஆந்திராவிற்கு வேலை செய்வதற்குப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். கால்நடைகள் குறைந்து போய் ஊர் அருள் அழக கெட்டு போனது. ஊரைச் சுற்றியிருந்த பெரிய பெரிய படைப்புகள் காணாமல் போய்விட்டன. மண்டையைப் பிளக்கும் வேனாப்பரிந்த வெய்யிலில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கரிசல் கருப்பு பாலைவனமாய் வறண்டு போனது. கூடாரமாய் நின்ற கருவேலமரம் கூட மொட்டையாய் நின்றது. மரம் தவறாமல் நின்று வாயைத் திறந்து கொண்டு அலகை சாய்த்துப் பார்த்து கா, கா என்று கத்தித் திரியும் அண்டங்காக்கைகள் காணாமல் போயின. மடத்தில் உட்கார்ந்து கொண்டு கெழடு கெட்டைகள் ஆராய்ச்சி பண்ணின.

இந்த மாதிரி மழை ஒரும்பாகிப் போனது எந்தக் காலத்திலயும் கெடையாது என்று ஊர் பெரியவர்கள் கூறினார்கள். "மழை வேண்டாம்னு சாமியக் கும்பிட்டு வழியனுப்பி வச்ச காலம் போச்சு இத்தன வருசம் மழ போதும்னு வெரட்றதுக்கு இப்ப மழ பெய்ய மாட்டுக்கு" என்ற சம்சாரிகளின் மனக்குமுறல் முன்பு மழை பெய்யும் போது நடுவை முடிந்ததும் விதைகள் முளைத்த பின்னர் மழை அதிகமாக பெய்தால் முளைகள் அழுகிப்போக வாய்ப்புள்ளது. ஒருவேலை உழவு அறுத்து போட்டப் பின்னர் மழை அதிகமாக பெய்தால் நாற்று அடிக்கும் முன்பு பயிர்கள் முளைத்து விடும் என்பதற்காக மழையை போதும் என்று கூறி வழியனுப்பியுள்ளனர். அதனை இக்கருத்து தெரிவிக்கினற்து. நாகரீகம் பெருகப்பெருக மழ பெய்ய மாட்டுக்கு என்று சம்சாரிகள் அவர்களுக்குள் பேசிக் கொண்டனர்.

மடத்தில் எந்நேரமும் கூட்டம் கூடிக் கிடந்தது. வேலை வெட்டி ஒரும்பாகிப் போய்விட்ட படியால் அவர்கள் தூங்கித் தூங்கி பேசிபேசிப் பொழுதைக் கழித்தார்கள். மழைப்பொழிவின் நிலையற்ற தன்மையாலேயே தான் உருளைக்குடி கிராம மக்கள் வாழ்வியல் ஆதாரமாக இருந்த விளை நிலங்கள்

தரிசாய் மாறியது, கண்மாய் மேடேறி கிணறு வறண்டு போகும். நிலை ஏற்பட்டு, முப்போகும் விளைந்த பூமி பாலைவனமாக காட்சியளிக்கின்றது.

இப்படி ஒருபுறம் மழையின் அளவு குறைந்து கொண்டே போக, அந்த சமயம் கங்காணி என்பவன் உடலை அடக்கம் செய்ய அவர்களின் குடும்பத்தினர், உருளைக் குடிக்கு வந்தனர். கங்காணி என்பவன் பெயர் பவுல், பவுலும் அவன் அம்மாவும் உருளைக்குடியில் இருந்தபோது வீடுவீடாய் கையேந்தி உணவு பெற்று உண்டு வாழ்ந்து வந்தனர். யாராவது கொடுக்கும் கிழிந்த வேஷ்டியை உடுத்துக்கொண்டு பவுல் அலைந்தான். ஒருநாள் ஊர் கிணற்றில் புவல் அம்மா விழுந்து இறந்தப்பின் பவுல் ஊரைவிட்டு வெளியேறி பினாங்கில் கண்காணியாக வேலை பார்த்துவிட்டு சொந்த ஊருக்கு வந்தான். அவன் வரும்போது ஒரு வெள்ளைக்காரியை திருமணம் முடித்து கூட்டி வந்தான். அதன் பின்னர் இப்போது தான் அவன் குடும்பம் வருகின்றது. அவன் மகன் துரைராசு ஊரில் உள்ள சம்சாரிகளுக்கு கடன் கொடுத்து பாதிபேர் நிலத்தை இவன் வாங்கக் கொண்டான். அந்த நிலத்தில் இருந்த கிணற்றைத் தோண்டி துரைராசு ஆழப்படுத்தினான். அதனால் மற்ற கிணறுகளில் இருந்த தண்ணீர் வற்றி வறண்டு போனது. இதனால் துரைராசு நிலத்தில் உள்ள கிணற்றில் தண்ணீர் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை சம்சாரிகளுக்கு ஏற்பட்டது.

எப்படியும் வருசா வருசம் கண்மாய் நிறை பெருக்கு பெருகிவிட்டால் கிணறுகளில் தண்ணீர் தட்டுப்பாடே வராது இல்லையென்றால் வருசா வருசம் இந்தப் பாடுதான் உழைத்து கங்காணியிடம் கொடுத்து விட்டுப் போகவேண்டிய பரிதாபம் சம்சாரிகளின் வாழ்க்கையில் தீராத வலியாய் இருந்தது.

## தொழில்மயமாதல்

1991இல் உருவாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையின் நோக்கங்களை அடைய பல்வேறு பொருளாதார நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. விவசாயத்தையே நம்பிக் கொண்டிருந்த நம் நாட்டின் தொழில்களை விரிவுப்படுத்தி பொருளாதார வளர்ச்சியையும், வளத்தையும் அதிகரிக்கம் நோக்கத்துடன் புதிய பொருளாதாரக் கொள்கை திட்டமிடப்பட்டது. தொழில் வளர்ச்சி அதிகமாதல், தன்னிறைவு, பொருளாதாரச் சிக்கனம் ஆகியவை ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கும். தேசிய வருமானமும் தனிநபர் வருமானம் பெருகும் உற்பத்தித் திறனும் பெருகும். நிதி நிறுவனம், போக்குவரத்து, தகவல் தொடர்பு வளரும் வேளாண்மை முறை செம்மைப்படும், மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்கும். சந்தைப் பொருளாதாரம் பலப்படும் வறுமை வட்டம் சுருங்கும், ஏற்றுமதி பெருகும் நகர வளர்ச்சி, கல்வி மேம்பாடு, தேசியப் பாதுகாப்பு புலப்படும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தொழில் நிறுவனங்கள் தோற்றம் பெற ஆரம்பித்தன. இந்தியா வளர்ச்சி அடைந்த போது போர்த்தளவாடங்கள், இரயில் போக்குவரத்து, தபால், தந்தி, துறைமுகம் போன்ற சில தொழில்கள் மட்டுமே அரசின் நிர்வாகத்தின்கீழ் இருந்தன. தொழில் புரட்சிக்கு தேவையான இரைக்கத் தொழில்களைப் பொதுத்துறையில் தொழில் நிறுவனங்களுக்கு முன்னுரிமையும் பாதுகாப்பும், ஊக்கமும் கொடுக்கப்பட்டதால் பருத்தி துணி தொழில், இரும்பு, எஃகுத்தொழில், சணல் ஆலைத்தொழில் போன்ற பெரும் ஆலைகளும் தொழிற்சாலைகளும் தோற்றம் பெற்றன.

மேலும் சிறுதொழில்கள் என்ற பெயரில் மின்னனுப் பொருள்கள் நுண்கருவிகள் எந்திர பாகங்கள் காலணிகள், விவசாயக் கருவிகள் போன்றவைகளை மாநிலங்களில் தோற்றம் பெற செய்தனர். மேலும் ஒவ்வொரு மாநிலத்திலும், தலைநகரங்களிலும் தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டு சிறுதொழில்கள் உறுக்குவிக்கப்பட்டன. அரசே கடனுதவியும், தொழில்நுட்ப உதவியும் அளிக்கிறது. தொழில் வினைஞர்கள், கிராம மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு இதனால் வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்று கூறுகின்றனர்.

“ஒரு குறிப்பிட்ட பகுதியில் குடிசைத் தொழில்கள், சிறுதொழில்கள், பெரும் ஆலைகள் ஆகியவற்றில் ஏதேனம் ஒன்றை அறிமுகப்படுத்தும் போது அப்பகுதியின் பொருளாதார அமைப்பு ஒரு புதிய பாதைக்குத் திரும்புகிறது. வாழ்வின் ஒரு பிரிவில் ஏற்படும் மாற்றம் பின்னர் தொடர்ச்சியாக வேறு பிரிவுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்திவிடும்” என்ற கருத்து ஒரு பகுதியில் ஏற்படும் தொழில்

முறை மாற்றமானது மரபுச் சமுதாய வாழ்க்கை முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி விடும் என்ற கருத்து இதன்மூலம் புலனாகிறது (Bhakthavachala Bharathi, 2019).

1991இல் கொண்டுவரப்பட்ட பொருளாதார சீர்த்திருத்தக் கொள்கையின் தாக்கம் கிராமப்புறங்களிலும் ஏற்பட்டது. இதன் விளைவாக இயற்கை வளங்கள் மிகுந்து காணப்பட்ட உருளைக்குடி கிராமத்தில் மழை இல்லாமல் விதைக்காமல் கரிசாய்ப் போட்டுவிட்ட காடுகளை குறைந்த விலையில் கிரையம் முடிக்கவும் கட்டுக் குத்தகையாகவோ அல்லது ஒத்தியாகவோ அல்லது அடமானம் பிடிக்கவும் பட்டணத்திலிருந்து தீப்பெட்டி ஆபிஸ் முதலாளிகள் ஊர் தவறாமல் ஏஜெண்டுகள் அனுப்பி பேரம் பேசினார்கள். ஏஜெண்டுகள் பணத்துடன் ஊருக்குள் வந்துவிட்டால் போதும் சம்சாரிகள் அவர்களைச் சூழ்ந்துக்கொண்டு நிலத்தைப் பேரம் பேச போட்டிப் போட்டார்கள்.

"மாற்றிக் கொடுக்காத நிலம் - விற்பனைக்கு ஏற்ற நிலம்" (Stephen, 2017). வேறுவழியின்றி விளைநிலங்களை விற்பனைக்குக் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதை இக்கூற்று உறுதி செய்கின்றது. முந்தியெல்லாம் சம்சாரிகளின் வீடுகளில் குவிந்து கிடக்கும் விளைபொருட்களை விலைபேச வந்த காலம் மாறி விளை நிலங்களையே விலைபேசும் காலம் வந்துவிட்டதை மேற்கண்ட செய்தி உறுதி செய்கின்றன.

## பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கைகள்

பொருளாதார சீர்த்திருத்தக் கொள்கை காரணமாக ஏராளமான அந்நிய தொழில் நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. இதன் தாக்கம் கிராமப்புறங்களிலும் ஏற்பட்டு பல தொழில் நிறுவனங்கள் தோன்றியது. இதனால் உருளைக்குடி கிராமத்தில் இருந்த மக்கள் பழைய தொழில் முறையான வேளாண் தொழிலை மறந்துவிட்டு நவீனமயத்தை விரும்பி தொழிற்சாலைகளுக்கு கூலி வேலைக்குச் சென்றனர்.

வீயென்னா மானா என்பவர் கரிமூட்டம் போடும் தொழிற்சாலையே இக்கிராமத்தில் அறிமுகம் செய்தார். ஊர்சனம் பூராவும் வேலிக்கரு வேலமரம் வெட்டிச் சுமந்தார்கள். ஒரு எடைக்கு இவ்வளவு என்று கணக்காகையால் மும்முரமாய் மரம் வெட்டினார்கள். ஓடைகளிலும், புறம்போக்கு நிலங்களிலும், தரிசுகளிலும் ஒரு குச்சிகூடக் காணவில்லை எல்லாற்றையும் வெட்டிச் சுமந்தார்கள்.

இந்த நிலையில் தீப்பெட்டி ஆபிஸ் வேலையும் இக்கிராமத்தில் ஆரம்பித்துவிட்டார்கள். கரிமூட்டம் போடும் தொழிற்சாலைக்கு விறகு வெட்டி சுமந்தவர்கள் தீப்பெட்டி ஆபிஸ் வந்ததும் மிகவும் லாபம் பெற்றனர். என்பதனை பின்வருமாறு கூறுகின்றனர். "இந்த வேலிக்கருவேல மரம் வெட்டுபையலக்கு வந்த பிரியத்தப் பாரு ஆட்கள கையில் புடிக்க முடியல அங்க ஒரு எட்டு இங்க ஒரு எட்டு வச்சு நடக்கான் புதுசா வாழ்வுவரப் போயி அப்படி நடக்கச் சொல்லுது" என்ற உரையாடல் விறகு வெட்டுன தொழிலாளிகள் வாழ்வில் தீப்பெட்டி ஆபிஸ் வந்தப் பின்பு ஏற்பட்ட மாற்றத்தினை குறிப்பிடுகின்றது.

தீப்பெட்டி தொழிற்சாலைகள் வரும் முன்பு விறகு வெட்டும் தொழிலாளிகள் ஒரு வண்டி நெறைய விறகு வெட்டி பட்டணத்துக்கு கொண்டு போயி நாயா வெறகு வெறகுனு தொண்ட கிழிய கத்தி விக்கனும். ஆனால் இப்போது அந்த நிலை இவங்களுக்கு இல்லை. எங்கம்பெனில எறக்கு ஒங்கம்பெனில எறக்குனு தீப்பெட்டிக் கம்பெனி மொதலாளிகள் வரிசையில நிக்கான். சொன்ன சொல்ல வெலக்கி மறுபேச்சு பேசாம ரூவாய எண்ணிக் கைல கொடுத்துறாங்க. முன் கூட்டியே அட்வான்ஸ் வேற ஆயிரம் ரெண்டாயிரம்னு போகும். மெழுகு அடுப்பு எரிக்கவும் மருந்த காய்ச்சி முக்கவும் கட்டாயம் வெறகு வேணும் அது தூறா இருந்தாலும் சரி கட்டை கட்டையாக இருந்தாலும் சரி அவனக்குத் தேவ வெறகு என்ற நிலை ஏற்பட்டது.

தீப்பெட்டி கம்பெனி முதலாளிகளுக்கு மாடுகள் தேவைப்பட்டன. அந்த மாடுகளுக்கான தீவனம் தேவைப்பட்டது. ஒவ்வொரு தெருவாய்ப் போய் தீப்பெட்டிக் கட்டைகளை வீடுவீடாய் இறக்கவும் அடுக்கிய கட்டைகளையும் ஒட்டியப் பெட்டிகளையும் ஏற்றிக்கொண்டு வர டயர்கள் மாட்டிய பெரிய மாட்டு வண்டிகளைப் பயன்படுத்தினார்கள். ஒவ்வொரு கம்பெனியிலும் கட்டாயம் வண்டி மாடு நிற்கும்.

இப்படி தீப்பெட்டி ஆபிஸ் வேலை வீட்டில் இருந்தே அலைச்சல் இன்றி மக்கள் உழைக்க ஏதுவாக அமைந்தது.

மேலும் சாக்கு கம்பெனிகளும், தீப்பெட்டி தொழிற்சாலைகளும் தோற்றம் பெற விவசாயத்தை விட்டு அந்த நிறுவனங்களுக்கு ஊர் மக்கள் வேலைக்கு செல்ல ஆரம்பித்துவிட்டதால் விவசாயம் செய்ய ஆள் கிடைக்காமல் வேளாண்மை பாதிக்கப்பட்டது.

"இந்தியாவின் பல மாநிலங்களிலும் விவசாயத்தில் உள்ள தலையாய பிரச்சினை வேலைக்கு ஆள் இல்லாத் திண்டாட்டம்" என்ற நாராயணனின் கருத்து இதனை மெய்ப்பிக்கிறது (Narayanan, 2014).

சாக்கு கம்பெனிகள் மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகள் அமைக்க விவசாய விளைநிலங்கள் விற்கப்பட்டன. இதனால் விவசாய நிலத்தின் தொழிற்சாலைகள் தோன்றி விளை நிலங்கள் குறையத் தொடங்கின. பெரிய பெரிய சம்சாரிகள் கூட கூலிவேலைக்குச் சென்றனர். ஊரில் சம்சாரிகளை அண்டிப் பிழைத்த தொழிலாளிகள் யாருமே இல்லை. சம்சாரிகளே தகிடுதத்தம் போட்டு காத்தாடிப் போனபிறகு அவர்களால் ஊரில் தாக்குப்பிடிக்க முடியவில்லை. வெளியூர் சென்றுவிட்டனர். இப்படி அந்த கிராமத்தில் விவசாயம் நலிவடைந்து போன இடம் தெரியாமல் போனது என்ற செய்தியை இந்நாவலின் ஆசிரியர் சித்தரித்துக் காட்டியுள்ளார்.

"வேலைக்கு முன்ன மாதிரி ஆள் கிடைக்கல அப்படியே கெடைச்சாலும் வணங்கி வேல செய்யமாட்டேங்கிறாக சம்பளம் திட்டாங்கெட்ட சம்பளம் கேக்காக. கையில பணம் கொடுத்ததும் வேலைக்கு வாராக, இஞ்சிக்கணக்கும் பாக்காக." வெளச்சாலும் முந்தி மாதிரி ஏறிமாறி வெளையல, மழையும் வரவர வருசத்துக்கு வருசம் ஒரும்பாகிப் போச்சு போற போக்கைப் பார்த்தால் சம்சாரிகள் பூராவும் சட்டி எடுக்க வேண்டியதான் பாக்கி என்ற செய்திகள் கிராமப்புற விவசாயம் மாற்றம் கண்டுள்ளமையை உணர்த்துகின்றன.

தீப்பெட்டி தொழிற்சாலைகள் வர ஆரம்பித்ததால் விவசாயம் குன்றி விட்டதையும் இந்நாவலில் காணமுடிகின்றது. தீப்பெட்டி ஆபிஸ் இல்லாமல் இருந்த நிலையில் பொம்பள புள்ளைக காட்ல வேல செஞ்சாத்தான் கஞ்சிக்கிற நெலம வணங்கி வேல செஞ்சாங்க. இப்ப வெயில்ல கொடந்து எதுக்கு சாகினம்னு கம்பெனிகளுக்குப் போறாங்க. "ஒரு பயலுக்கு நான்கு புள்ளைன்னா ரெண்டு பொட்டக்கழுத தீப்பெட்டி ஆபிசப் பாத்து போயிறா மத்த ரெண்டு பயலும் அரையும் கொறையும் படிச்சிட்டு ஒரு கொளாய மாட்டிக்கிட்டு மேலயும் கீழயும் பாத்துட்டு அலையிறான்" என்ற சம்சாரிளின் புலம்பல் தீப்பெட்டி ஆபீஸ் வந்ததால் ஊரின் நிலைமை மாறிக்கொண்டு போவதை வெளிப்படுத்துகின்றது.

வெயிலில் கிடந்து கஷ்டப்படனும்னு மட்டுமல்லாமல் கரிசல்காட்டு வேலைக்கு வந்தால் சேல அழுக்காகிப் போகும் வெயில்ல ஒடம்பு கறுத்துப் போகும். சினிமாப் பாட்டு கேக்க முடியாது தினமும் தன்னை அலங்கரித்து கொள்ள முடியாது. இத்தனையும் தீப்பெட்டி ஆபிஸ் வேலையில் கிடைப்பதால் பெண்கள் அனைவரும் தீப்பெட்டி ஆபிஸ் வேலைக்கு செல்கின்றனர்.

"அந்தக் காலம் மாதிரி நெனக்காதடா காலம் மாறிப்போச்ச. சோத்துக்கம் வேட்டிக்கும் வேல செஞ்ச காலம் மலையேறிப் போச்சு என்ன வேலசெஞ்சாலும்அப்பவே துட்டு கைக்குவரனம்" என்ற நிலைக்க கிராமமக்கள் மாறிவிட்டனர்.

ஊரின் நிலைமை முற்றிலுமாக மாறுபட்டுவிட்டது. ஊர் மட்டுமல்லாது, மக்களும் அவர்களின் பண்பாடும் மாற்றம் பெற ஆரம்பித்தது. நல்லா மழைபெய்து காடுகளில் பருத்தியும் நிலக்கடலை, உளுந்து, பாசிப்பயறு, மொச்சைப்பயறு, தட்டப்பயறு, நெல், சோளம், தினை போன்ற ஏராளமான விளைச்சலைக் கொடுத்த கரிசல் நிலமானது, கண்ஹக்கு எட்டும் மட்டும் சீவுகள் வளர்ந்து கரடுமுளைத்து களையிழந்து கிடந்த கரிசல் காடுகளாகவும், நடுநடுவே நிற்கும் கருவேல மரங்களும், புதராய் மண்டி வளர்ந்து செழித்து நிற்கும் மஞ்சனத்திச் செடிகளையும் இலந்தைச் செடிகளையும் பார்த்து முகஞ்சுளித்தனர். அந்தப் பாதை வழியே போவோரும் வருவோரும் இந்த காட்சியப் பார்த்து மிகவும் வருந்தினர்.

கோடைக்காலத்தில் உழுத கரிசலை ஏறியிட்டுப் பார்த்தால் கம்பளியை விரித்தாற்போன்று கறுப்பு வைரமாய்த் தெரியும். ஆனால் இன்று நரி போனாலும் தெரியாது. நாய் போனாலும் தெரியாது, அந்த அளவிற்கு முள்ளும் மொடலும் மண்டி, புதராய்க் கிடக்கிறத. இந்த தொழிற்சாலைகள் வந்ததால் ஊரே அருள் கெட்டுப்போய் கிடந்தது. ஊரையே சுற்றி நிற்கும் பெரிய பெரிய படப்புகள் மாட்டுத் தாவணியைப் போல் வரிசை வரிசையாய்க் கட்டிக் கிடக்கும் மாடும், கிடங்குகளுக்கு மேலேயும் ஓராள் உயரத்திற்கு மேடேறிக் கிடக்கம் குப்பை மேடுகள், குளம் எங்கும் கிடக்கும் கலப்பைகள் ஏர்க்கால்கள், புதுசாய் செதுக்குவதற்காக மாசக்கணக்கில் தண்ணீரில் ஊரப்போட்டு வெய்யிலில் கிடக்கும் கலப்பைக் குத்திகள், தச்சாசாரி வீட்டு முன்னாலும் கொல்லாசாரி வீட்டு முன்னாலும் எந்நேரமும் கூடியிருக்கும் சம்சாரிகள் இன்று கூலி வேலைக்கு செல்கின்றனர். வாச்சாத்தால், மரச்சிராய்கள் நிறைந்த ஆசாரியின் பட்டறையும், துருத்தி ஊதும் அடுப்படியைச் சுற்றியும் இரும்பேறிய மண் திட்டில் ஊமத்தைச் செடிகள் முளைத்துக் கிடந்ததையும் பார்த்து ஊர் அடைந்துள்ள மாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் சம்சாரியாகிய பெரியசோலை வருந்தினான்.

விவசாயம் செய்யும் சம்சாரிகள் அவர்களின் காட்டில் வேலை பார்த்த விவசாயிகள் என்று அனைவரும் பிற தொழில் நிறுவனத்திற்கு வேலைக்கு சென்றுவிட்டனர். பிறதொழில் நிறுவனம் வந்ததால் விவசாயம் செய்யும் விளைநிலங்கள் விற்கப்பட்டன. விவசாயம் செய்ய தேவையான கருவிகள் அதாவது ஏர்க்கால், கலப்பை போன்றவை செய்யும் தச்சர்களும், கொல்லர்களும் இக்கிராமத்தில் விவசாயம் நலிவடைந்ததால் வேறுதொழில் நிறுவனங்களுக்கு வேலைக்கு செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். விவசாயமே செய்வது இல்லை என்று போகும் பட்சத்தில் விவசாயம் செய்ய தேவைப்படும் கருவிகளுக்கு இங்கு வேலை இல்லாமல் போனது. இதனால் ஏர்க்கால், கலப்பை, போன்றவை தயாரிக்கும் கொல்லர்களுக்கும் வேலை இல்லாமல் போனதால் அவர்கள் வேறு தொழில் நிறுவனங்களை நாடிச்சென்று கூலி வேலை செய்யும் நிலைக்கு ஆளாகினர்.

விவசாயிகளின் வாழ்க்கை முறையினை மேம்படுத்த கொண்டுவரப்பட்ட பொருளாதார சீர்த்திருத்தத்தினால் அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகம் கிடைக்கும் என்ற நோக்கத்தில் கொண்டுவரப்பட்ட தொழிற்சாலைகளால் விவசாயிகள் வாழ்க்கை மாறும் என்று எண்ணிய அரசாங்கம் இதனால் விவசாயம் மறையும் என்பதனை அறியாமல் போய்விட்டது.

தொழிற்சாலைகள் தோற்றம் பெற்றப் பின்னர் இக்கிராமத்தில் எழுந்த மாற்றத்தினைப் பார்க்கும்போது இந்த கிராமத்தின் முக்கியப் பணியாக இருந்த வேளாண்மை மறைந்து நவீனமயமான தொழிற்சாலைகள் மற்றும் பிறதொழில் நிறுவனங்கள் இக்கிராம மக்களின் வாழ்வில் ஒரு அங்கமானதை பார்க்க முடிகின்றது.

நாகரீகம் என்ற பெயரில் பழமையான மரபுகளை மறந்து நவீனத்துவத்தை விரும்பி மக்கள் செல்கின்றனர். இதனால் இக்கிராமத்தில் விவசாயம் நலிவடைந்ததையும் பாரம்பரியம் மறைந்து போனதையும் காணமுடிகின்றது.

## நவீனமயமாதல்

"மரபுச் சமுதாயங்கள் தொழில்மயமான நாடுகளின் தொழில்நுட்ப முறைகளையும் சமுதாயப் பண்பாட்டு முறைகளையும் ஏற்கும் நிகழ்வு நவீனமயாதல்" (சீ.பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.580) என்று அழைக்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் இக்கிராம மக்களின் வாழ்வில் கிணற்றில் நீர் இறைக்கும் மோட்டார்கள், உழவு அடிக்கும் மோட்டார்கள், காடுகரைகளுக்கு குப்பை அடிக்கும் மோட்டார்கள். கதிர்களை களத்திற்குக் கொண்டுவந்து சேர்க்கும் உழவு மோட்டார்கள் மற்றும் பயிர்களுக்கு நோய்வராமல் இருக்கும் வகையில் அதன்மீது பூச்சிக்கொல்லி மருந்து அடிக்கும் பம்புசெட் மோட்டார்கள் போன்ற எந்திரங்கள் கங்காணி என்பவனால் உருளைக்குடி என்னும் ஊரில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏர்க்கால் கலப்பை போன்றவற்றை பயன்படுத்திய மக்கள் உழவுத்தொழில் செய்ய நவீன எந்திரங்களை பயன்படுத்த ஆரம்பித்தனர்.

வேளாண்மை நம் நாட்டு பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்கிறது. நமது நாட்டின் நாட்டு வருவாயில் 40 விழுக்காடு வேளாண்மையில் இருந்தே பெறப்படுகிறது. எனவே அரசு வேளாண் முன்னேற்றத்திற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நாட்டு விடுதலைக்குப்பின் இந்தியப் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்வதையே தலைவர்களும், திட்ட வல்லுநர்களும் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர். முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேரு கிராமப் பொருளாதாரத்தை வலுப்படுத்த விரும்பினார். எனவே வேளாண்மை, நீர்ப்பாசனம் மற்றும் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு முன்னரிமை அளித்தார். விரைவான பொரளாதார வளர்ச்சியடைய பொதுத்துறையும், தனியார் துறையும் ஒருங்கிணைந்து செயல்படும் கலப்புப் பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்த நேரு தீர்மானித்தார்.

எனவே பொருளாதார வளர்ச்சிக்கு ஐந்தாண்டுத் திட்டங்களே சிறந்தது என்று பரிந்துரைத்தார். இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டக்குழு 1950 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டு இந்தியாவில் “பசுமைப்புரட்சி” அறிமுகப்படுத்தப்பட்டது. இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் ‘பசுமைப்புரட்சி’ என்ற செயல்முறையை நிலச்சீர்த்திருத்தம், அதிக விளைச்சல் தரும் வீரியமள்ள விதைகள் பயன்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட பாசன வசதிகள் மூலமாக அறிமுகப்படுத்தியது.

‘பசுமைப்புரட்சி’ என்பது கோதுமை மற்றும் அரிசி போன்ற உணவுப் பயிர்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மிகுந்த விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகளைப் பயன்படுத்துவதாகும். மேலும் அதிக விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகளைப் பயிரிட நீர்ப்பாசன வசதிகள் இரசாயண உரங்கள், பண ஆதாரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளும் தேவைப்படுகின்றன. இத்தகைய விதைகளையும் அதற்கு தேவையான உரங்களையும் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளும் வாங்க வசதி இல்லாமல் கிராம மக்கள் கடன் வாங்கி விவசாயம் செய்தும் போதிய பலனின்றி வாங்கிய கடனை செலுத்த முடியாமல் அவதிப்பட்டுள்ளனர்.

வருடா வருடம் மழையின் அளவு குறைந்து கொண்டே வந்த நிலையில் புதிய புதிய வெள்ளாமைகள் வைத்தார்கள். பழைய பயிர் வகைகளையும் குப்பைசாண உரங்களையும் மறந்து போனார்கள். விதைப்பு காலங்களில் விதைகள் வாங்குவதற்காகவும் உரமூட்டைகள் வாங்குவதற்காகவும், அரசாங்க ஆபிசுகளில் காத்துக் கிடந்தார்கள் என்ற சம்சாரிகளின் புலம்பல் பசுமைப்புரட்சி அறிமுகமான பின்னர் சம்சாரிகளின் நிலையை வெளிப்படையாக காட்டி நிற்கின்றது.

மருந்து தெளிப்பதற்குகூட மோட்டார் பம்புகளை வாடகைக்கு வாங்கினார்கள். புதிய புதிய நோய்களும் களைகளும் சம்சாரிகளுடன் சரி மல்லுக்கு நின்றன. மழைகுறைந்த வருடங்களில் கண்மாய் பெருகாமல் பாதி விளைச்சலில் கையை விரித்துவிடும். அப்படிப்பட்ட நேரங்களில் கங்காணியின் கிணற்றிலிருந்து மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ச்சி ஒன்னுக்குப் பாதியாய் வெள்ளாமை எடுத்தார்கள். கங்காணிக்கு ஒரு மணிக்கு இவ்வளவு என்று வாடகைப் பணம் கொடுத்தார்கள் ராவும் பகலும் மோட்டார் ஓடிக்கொண்டிருந்தது. தண்ணீர் வற்றிவிடும் காலங்களில் கிணற்றடியில் உறங்கியும் ஊறஊறத் தண்ணீர் பாய்ச்சி அரைகுறையாய் வெள்ளாமை எடுத்து நொந்தார்கள். அவர்கள் வெள்ளாமை எடுத்தவுடன் மொத்தச் செலவினையும் கூட்டிக்கழிச்சி கணக்குப் பார்க்கையில் செலவைக் கண்டு மலைத்துப் போனார்கள்.

“இந்த பாடுபட்டு இவ்வளவு செலவழிச்சு வெள்ளாமை எடுக்கிறதுக்கு பதிலு பேசாம அரிசியே வாங்கியிருக்கலாமே இதுல என்ன லாபம் இருக்குனு இந்தப் பாடுபடனும்” என்று சம்சாரிகள் புலம்பினாலும் தரிசாய்ப் போட்டுவிட்டால் கேவலம் என்று உழுதார்கள் விதைத்தார்கள்.

ஊர் பெரியவர்கள் கூடி பேசும் போது “எனக்கு தெரிய எந்தக் கெணத்துல தர தெரிஞ்சது எல்லாக் கெணறும் எப்பப் பார்த்தாலும் கெத்து கொத்துன்னு கெடக்கும் பால்க்கொடி ஓடையில தண்ணி ஓடி பாசம் பிடிச்சு எழுக்க விழுந்து கெடக்கும் தரையில் கால் வச்சா ஒடன கால் தடத்த தண்ணி மூடிரும் அப்பிடி சொதசொதன்னு கெடந்த பூமி இன்னைக்கிஒலர்ந்து போயிருச்சு" என்று பேசி வருத்தப்பட்டுக் கொண்டு திரிந்தார்கள்.

இந்த மோட்டார்களும், வீரியமுள்ள விதைகளும் வருவதற்கு முன்பு இருந்த நிலையை எண்ணிப் பார்த்தனர். ஊர் பெரிய ஆள்க எல்லாரும் கூடி பேசும்போது "நம்ம காலத்துல காட்டுக் கம்மங்கஞ்சி காச்னா கும்பாவுல போட்டுக் கரைச்ச. அப்பிடியே பிசுபிசுன்னு ஒட்டும் வெறுங்கஞ்சியவே குடிக்கலாம். அப்படி ருசியாய் இருக்கும்" என்ற இவர்களின் உரையாடல் வீரியமுள்ள விதைகளை பயிரிட தேவையான இரசாயண உரங்கள் பூச்சிக்கொல்லி மருந்தகள் இயற்கையான சுவையை மாற்றம் அடையச் செய்கின்றது என்பது புலனாகிறது.

இப்போது விளைந்து வருகின்ற கம்மம் புல்லு கஞ்சியே சேரமாட்டங்கு முழிச்சிட்டு முழிச்சிட்டு நிக்கி. சோறும் திண்ணா ருசியத்தப் போயி சக்க கெணக்கா மண்ணத் திண்ணாப்ல இருக்கு என்று உணவின் சுவையில் ஏற்படும் மாற்றங்களையும் ஆரோக்கிய மாற்றத்தினையும் குறிப்பிடுகின்றனர்.

"ஒழவு உழும் போதே கலப்பையிலேயே அடி ஒரம் போடுறான். பெறகு வெதச்ச நாள்ளருந்து மாறிமாறி மருந்து ஒரம் சாப்பாடு எப்பிடிக்கூடி ருசியாயிருக்கும் மண்ஹ கெனக்கத்தான் இருக்கு" என்ற சம்காரிகளின் கருத்தில் இருந்து, இயற்கையாக விவசாயம் செய்த காலத்தில் விளைச்சலும் அதிகமாக இருந்தது உடலுக்கும் ஆரோக்கியம் கொடுக்கக் கூடியதாகவும் இருந்துள்ளது என்பது தெளிவாகின்றது. ஆனால் இன்று செயற்கையாக உரம் போட்டு விவசாயம் செய்கின்றனர். ஆனால் அந்த அளவிற்கு விளைச்சலும் இல்லை. உணவுப் பொருளில் சத்தும் இல்லை என்பது தெளிவாகின்றது.

இதனை "மட்ட நெல் போட்டா சொன்ன சொல்படி விளையும் வெறுஞ்சோத்த பிடிச்சு பிடிச்சு ஒரு கும்பா திங்கலாம். வைக்கோலும் ஓராள் ஒசரம் வளரும். மாடுகளுக்குப் போதும் போதும்னு கெடக்கும். இப்ப ஒரு சாண் வளருது அதுக்குள்ள எத்தனை ஓவினியம் பாக்க வேண்டியதிருக்கு எத்தன மருந்தடிச்சும் நோய் சுழிசுழிய மாட்டித் தள்ளிருது வெள்ளாம எடுத்துக் கூட்டிக் கழிச்சி கணக்குப்பாத்தா குருட்டாட்டு நெய்யி குருட்டாடு கண்ஹக்குத்தான் போடச் சரியாயிருக்கும்ன கததான்" என்ற சம்சாரிகளின் உரையாடல் நிலத்தில் நவீன உரங்களையும், பூச்சிக்கொல்லி மருந்துகளையும் போடுவதால் மண்ணின் இயற்கையான சத்துக்கள் அழிந்து விளைச்சல் குறைகின்றது என்பதனை தெளிவுப்படுத்தகின்றது. ஆகும் செலவினை வரவோடு கணக்கிட்டுப் பார்த்தால் இலாபம் எதுவும் இல்லை என்பது இச்சொலவடை மூலம் புலனாகிறது.

## முடிவுரை

விளைச்சலை அதிகரிக்கும் நோக்கில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட விதைகள், மிகவும் வீரியம் உள்ளனவாகவும், அதிக தண்ணீர் தளத்தில் விளையக் கூடியதாகும். இருந்தது மேலும் அதற்கு விதவிதமாக உரங்களும், பூச்சிக்கொல்லி மருந்துகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனால் அதிக மகசூல் பெறலாம் என்ற ஆர்வத்தில் மக்கள் அந்த விதைகளை பயிரிட ஆரம்பித்தனர். "வெதைக்கும், ஒரத்துக்கும், மருந்துக்கும் கவுருமென்டுல கையேந்திட்டு நிக்கான வெள்ளாம வெளையும் நூறு மூடை எது போட்டாலும் பத்து வண்டி மாட்டுச் சாணம் போட்டது மாதிரி இருக்குமா?" என்று சம்சாரிகள் இந்த வீரியம் அதிகம் உள்ள விதைகளை பயிரிடுவதால் ஏற்படும் விளைவை நினைத்து வருந்தினர்.

# References

Bhakthavachala Bharathi, (2019) Panpaattu Maanidaviyal Virivaakkappatta Pathippu, Adayalam Publication, Chennai, India.

Dharman, S. (2017) Thoorvai, Adayalam Publication, Chennai, India.

Madhaiyan, P. (2010) Sanga Ilakkiyaththil Velaan Samuthaayam, New Century Book House, Chennai, India.

Narayanan, R.S. (2014) Indraiya Vivasayam, Pavai Printers, Chennai, India

Stephen, G. (2017) Ilakkiya Inavaraiviyal, Pavai Printers, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License